(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 56.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 சனவரி 18 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2023 சனவரி 17 ஆம் திகதி 'குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்' எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள, மாகாண சபைகள் திணைக்களங்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 05 ஆம் பகுதியினை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 சனவரி 17 ஆம் திகதிய 2315/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினைச் சமர்ப்பித்தார்.

அப் பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி அமைச்சர் —

(i) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள்; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஔடத உற்பத்திகள், வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2017/2018 மற்றும் 2018/2019 ஆம் ஆண்டுகளுக்கான கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான சிரம வாசனா நிதியத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலம்;

(ii) தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம்;

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iv) 2021 ஆம் ஆண்டுக்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் வருடாந்த அறிக்கை

தொடர்பான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

பெலிஹுல் ஓயா, பம்பஹின்ன, சமனல வீதி எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.டி.எல். தேவப்பிரியவினது 2022.09.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. பாராளுமன்ற அலுவல்கள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் (உ) (iii ) பந்தி மற்றும் (4) மற்றும் (5) ஆம் உப உறுப்புரைகளின் கீழ் அரசியலமைப்புப் பேரவைக்கு பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுதலின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பின்வரும் மூன்று நபர்களை பெயர் குறிப்பிடுவதானது, அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் (5) ஆம் உப உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

1. கலாநிதி பிரதாப் இராமானுஜம்
2. டாக்டர் (திருமதி) தில்குஷி அனுலா விஜேசுந்தர
3. கலாநிதி (திருமதி) வெலிகம விதான ஆரச்சிகே தினேஷா சமரரத்ன

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.50 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக” என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.32 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

“கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக” என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.53 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.04 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு பிரேரணை சபைக்கு விடப்பட்டு சார்பாக 23: எதிராக 06 பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி இருபத்தெட்டு (28) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. Douglas Devananda | Yes |
| G 002. Nimal Siripala De Silva | Yes |
| G 003. Chamal Rajapaksa | Yes |
| G 006. Susil Premajayantha | Yes |
| G 007. Dinesh Gunawardena | Yes |
| G 009. Bandula Gunawardana | Yes |
| G 010. Keheliya Rambukwella | Yes |
| G 014. Ramesh Pathirana | Yes |
| G 015. M.U.M. Ali Sabry | Yes |
| G 016. Vidura Wickramanayaka | Yes |
| G 017. Kanchana Wijesekera | Yes |
| G 018. Naseer Ahamed | Yes |
| G 019. Manusha Nanayakkara | Yes |
| G 020. Tiran Alles | Yes |
| G 022. Nalin Fernando | Yes |
| G 023. Roshan Ranasinghe | Yes |
| G 024. Jagath Pushpakumara | Yes |
| G 026. Dilum Amunugama | Yes |
| G 027. Mohan Priyadarshana De Silva | Yes |

| | |
|---|---|
| G 028. Janaka Wakkumbura | Yes |
| G 030. Kanaka Herath | Yes |
| G 031. Thenuka Vidanagamage | Yes |
| G 036. Arundika Fernando | Yes |
| G 037. Vijitha Berugoda | Yes |
| G 038. Lohan Ratwaththe | Yes |
| G 039. Sanath Nishantha | Yes |
| G 040. Tharaka Balasuriya | Yes |
| G 041. Indika Anuruddha Herath | Yes |
| G 045. D. V. Chanaka | Yes |
| G 046. Sisira Jayakody | Yes |
| G 047. Piyal Nishantha De Silva | Yes |
| G 048. Prasanna Ranaweera | Yes |
| G 049. D. B. Herath | Yes |
| G 050. Shasheendra Rajapaksa | Yes |
| G 052. Shantha Bandara | Yes |
| G 053. K. Kader Masthan | Yes |
| G 054. Ashoka Priyantha | Yes |
| G 055. A. Aravindh Kumar | Yes |
| G 056. Geetha Samanmale Kumarasinghe | Yes |
| G 057. Suren Raghavan | Yes |
| G 059. Sivanesathurai Santhirakanthan | Yes |
| G 060. Chamara Sampath Dasanayake | Yes |
| G 061. Anupa Pasqual | Yes |
| G 062. Johnston Fernando | Yes |
| G 065. Gamini Lokuge | Yes |
| G 068.C. B. Rathnayake | Yes |
| G 069. S. M. Chandrasena | Not Voted |
| G 070. Mahindananda Aluthgamage | Yes |
| G 072. Namal Rajapaksa | Yes |

| | |
|---|---|
| G 073. Sarath Weerasekera | Yes |
| G 079. Jayantha Ketagoda | Yes |
| G 082. U. K. Sumith Udukumbura | Yes |
| G 084. Sanjeeva Edirimanna | Yes |
| G 085. Akila Ellawala | Yes |
| G 088. Nalaka Bandara Kottegoda | Yes |
| G 090. Kokila Gunawardene | Yes |
| G 091. Milan Jayathilake | Yes |
| G 092. Kulasingam Dhileeban | Yes |
| G 093. Sudarshana Denipitiya | Yes |
| G 094. Isuru Dodangoda | Yes |
| G 099. Mayadunna Chinthaka Amal | Yes |
| G 102. Gunathilaka Rajapaksha | Yes |
| G 103. Upul Mahendra Rajapaksha | Yes |
| G 104. Rajika Wickramasinghe | Yes |
| G 106. Madhura Withanage | Yes |
| G 107. D. Weerasingha | Yes |
| G 108. Samanpriya Herath | Yes |
| G 109. Sagara Kariyawasam | Yes |
| G 110. Yadamini Gunawardena | Yes |
| G 111. Manjula Dissanayake | Yes |
| G 113. Jayantha Weerasinghe | Yes |
| G 114. Marjan Faleel | Yes |
| G 115. Lalith Varna Kumara | Yes |
| G 116. S. Jagath Samarawickrama | Yes |
| O 007. Lakshman Kiriella | No |
| O 016. Anura Dissanayaka | No |
| O 025. Harsha De Silva | No |
| O 028. R. M. Ranjith Madduma Bandara | No |
| O 037. Vijitha Herath | No |

| | |
|---|---|
| O 043. Ashok Abeysinghe | No |
| O 049. Hector Appuhamy | No |
| O 055. Piyankara Jayaratne | Yes |
| O 056. Vasudeva Nanayakkara | No |
| O 057. Harini Amarasuriya | No |
| O 064. Imran Maharoof | No |
| O 069. Chaminda Wijesiri | No |
| O 070. Waruna Liyanage | No |
| O 072. Hesha Withanage | No |
| O 075. Chandima Weerakkody | No |
| O 081. W. H. M. Dharmasena | No |
| O 089. Nimal Lanza | Yes |
| O 090. Jayantha Samaraweera | No |
| O 106. M. Rameshwaran | Yes |
| O 108. Weerasumana Weerasinghe | No |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பின்வரும் பெயர்களை அழைப்பதன் மூலம் பின்வரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வாக்களிப்பினை மேற்கொண்டார்:—

| | |
|---|---|
| Nazeer Ahamed | Yes |

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 மற்றும் 2 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 23 முதல் 31 வரையிலான (இரண்டும் உட்பட)வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பணியகத்தின் குறிக்கோள்

3. பணியகத்தின் குறிக்கோளானது, அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு அல்லது சமூக பொருளாதார நியமங்களை அபிவிருத்திசெய்வதினூடாக பயனுள்ள மீள் ஒன்றிணைவு மற்றும் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கென சிகிச்சை மற்றும் பல்வேறு சிகிச்சை முறைகளை கடைப்பிடித்தலை உள்ளடக்குகின்ற புனர்வாழ்வை தேவைப்படுத்துகின்ற ஆளொருவராக சட்டத்தினால் அடையாளங்காணப்படக் கூடியவாறான வேறு எவரேனும் ஆளுக்கு புனர்வாழ்வளிப்பதற்காகவிருத்தல் வேண்டும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 3 முதல் 13 வரையிலான (இரண்டும் உட்பட)வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(அ) 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் நியதிகளின்படி சிகிச்சை மற்றும் புனர்வாழ்வைக் கோருகின்ற அல்லது சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்கப்படுவதற்கு அத்தகைய சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வை வழங்குதலும்;

(ஆ) இயைபான சட்டமொன்றின் நியதிகளின்படி புனர்வாழ்வைக் கோருகின்ற அல்லது புனர்வாழ்வு வழங்கப்படுவதற்கு அத்தகைய சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் ஆளுக்கு புனர்வாழ்வை வழங்குதலும்; ".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 22 ஆம் வரியை உடனடுத்து பின்வருவதனை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(உ) மனித உரிமைகள் பற்றிய அடிப்படை நெறிகளை கருத்திற் கொண்டு புனர்வாழ்வு, சிகிச்சை மற்றும் பிற்கவனிப்புக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக அமைச்சருக்கு மதியுரையளித்தலும்; ".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 1 முதல் 8 வரையிலான (இரண்டும் உட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘‘(ஆ) (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்"எனக்குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் ஐந்து உறுப்பினர்கள்:-

(i) கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டியவர்களும் புனர்வாழ்வளித்தல் துறையில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டியவர்களுமான இரண்டு ஆட்கள்;

(ii) கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டியவர்களும், சமூக ஒன்றிணைவுத் துறையில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டியவர்களுமான இரண்டு ஆட்கள்; அத்துடன்

(iii) கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டியவர்களும், சட்டம் மற்றும் ஒழுங்குத் துறையில் அனுபவத்தைக் கொண்டிருக்கவேண்டியவர்களுமான ஆளொருவர்;” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 முதல் 10 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

11 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘‘டன் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஏழு” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 முதல் 16 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன .

17 ஆம் வாசகம்

18 ஆம் பக்கத்தில் 9 முதல் 31 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் 1 முதல் 10 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 முதல் 22 ஆம் வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

23 ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 1 முதல் 6 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“புனர்வாழ்வுக் கான நிலையங்கள்

23. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களினதும் சட்டத்தினால் அடையாளங் காணப்படுகின்றவர்களும் அவர்களின் புனர்வாழ்வு சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டதுமான அத்தகைய ஆட்களினதும் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுக்கு, புனர்வாழ்வுக்கான நிலையங்களைத் தாபிக்கலாம்:” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(2) ஒவ்வொரு நீதிவானும் எந்த நீதிப்பிரிவு தொடர்பில் நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிப்பிரிவினுள் அமைந்துள்ள ஒவ்வொரு புனர்வாழ்வுக்கான நிலையத்துக்கும், அந்நிலையத்தில் புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆட்கள் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்றதாக அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்குப் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் விஜயம் செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, புனர்வாழ்வுக்கான நிலையத்துக்கு விஜயம் செய்கின்ற நீதிவான்-

(அ) புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆளை நேரடியாகப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் அவரது நல்வாழ்வு, சேமநலன் மற்றும் அத்தகைய நிலையத்தில் அத்தகைய ஆள் எந்த நிலைமைகளின்கீழ் வைத்திருக்கப்படுகின்றார் என்பவற்றைப் பரிசோதனை செய்தலும் வேண்டும்: அத்துடன் அந்நிலையத்தில் பேணப்படும் பதிவேடுகள் மற்றும் சம்பவ ஏடுகளைப் பரீட்சிக்கலாம்; அத்துடன்

(ஆ) அவரது அவதானிப்புக்களையும் புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆள் செய்யக்கூடிய ஏதேனும் முறைப்பாட்டையும் பதிதல் வேண்டும்.

(4) புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆட்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாமென நீதிவான் அபிப்பிராயப்படுமிடத்து, புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆள் மருத்துவப் பரிசோதனைக்காக சட்டமருத்துவ அலுவலரொருவரின் முன்னர் அல்லது ஓர் அரசாங்க மருத்துவ அலுவலரின் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும் அத்தகைய மருத்துவ அலுவலரினால் அறிக்கையொன்று நீதிவானுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும் நீதிவான் பணிக்கலாம்.

(5) புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென அத்தகைய மருத்துவ அலுவலரின் அறிக்கை வெளிக்காட்டுமிடத்து, அத்தகைய ஆள் மருத்துவ சிகிச்சைக்காக அரசாங்க வைத்தியசாலையொன்றுக்கு உடனடியாக அனுமதிக்கப்பட வேண்டும் என்ற மற்றும் அத்தகைய நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அரசாங்க மருத்துவ அலுவலரின் கண்டுபிடிப்புகளை அத்தகைய ஆளுக்கு புனர்வாழ்வளித்தலுக்கான கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் என்ற ஒரு கட்டளை உட்படதோதான கட்டளையொன்றை நீதிவான் ஆக்குதல் வேண்டும்.

(6) சித்திரவதை புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச் செய்வதற்கெனச் சார்த்தப்பட்ட சித்திரவதை பற்றி புலனாய்வொன்றைத் தொடங்கும் படி நீதிவான் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைப் பணித்தலும் வேண்டும்.

(7) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சொந்த துணிவாற்றலின் மீது அல்லது பெறப்பட்ட முறைப்பாடொன்றின் மீது, நிலையத்தில் புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆட்களின் உரிமைகள் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்குப் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு நிலையத்துக்கும் விஜயம் செய்யலாம் என்பதுடன் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் நியதிகளின்படி தோதான விதப்புரைகளையும் செய்யலாம்." .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24 ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மொன்றை அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பொருளை" .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் வாசகம்

24 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"எவையேனும் தகவல்களை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு" .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24 ஆம் பக்கத்தில் 5 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) புனர்வாழ்வுக்கான நிலையமொன்றின் கட்டுக்காப்பில் உள்ள அத்தகைய ஆள் தொடர்பிலான எல்லாப் பதிவேடுகளும், அந்தரங்கமானதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர வெளியிடப்படுதலாகாது -

(அ) அத்தகைய ஆளினாலான அல்லது அத்தகைய ஆளின் கிட்டிய உறவினரினாலான அல்லது அத்தகைய ஆளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணியொருவரினாலான கோரிக்கையின் மேல்; அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் மீது அல்லது தவறொன்றைப் புரிதல் தொடர்பிலான புலனாய்வொன்று சம்பந்தமாக :

ஆயின், அத்தகைய ஆள் அல்லது அத்தகைய ஆள் தகவலைப் பகிராதிருப்பதற்கு அறிவுறுத்தியிருந்தாலொழிய, அத்தகைய ஆளின் கிட்டிய உறவினர் அல்லது அத்தகைய ஆளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணியொருவர், அத்தகைய ஆளின் சிகிச்சை அல்லது புனர்வாழ்வு தொடர்பான தகவல் உட்பட புனர்வாழ்வு நிலையத்தின் கட்டுக்காப்பில் உள்ள அவ்வாள் தொடர்பான தகவலைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26 ஆம் வாசகம்

24 ஆம் பக்கத்தில் 20 முதல் 22 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"26. புனர்வாழ்வுக்குட்பட்டுள்ள எவரேனும் ஆளை அடிக்கின்ற, காயப்படுத்துகின்ற அல்லது வேண்டுமென்று அசட்டை செய்கின்ற. ".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

| | |
|---|---|
| "ஊழியகர்களுக்கு முட்டுக்கட்டையிடுதல் தவறொன்றாதல் | 27. புனர்வாழ்வுக்கான ஏதேனும் நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தனது சட்டமுறையான கடமைகளைப் புரிகையில் அவருக்கு சட்டமுறையற்ற விதத்தில் முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது சட்டமுறையற்ற விதத்தில் முட்டுக்கட்டையிடுவதற்கு எத்தனிக்கின்ற எவரேனும் ஆள், "..". |

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 16 முதல் 18 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“னால், அல்லது இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் பிடிக்கப்பட்டு உடனடியாக புனர்வாழ்வுக்கான நிலையத்துக்கு” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் 27 மற்றும் 28 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“வாறான குறைந்தபட்ச வலோத்காரத்தப் பயன்படுத்துவது அத்தகைய ஆளுக்குச்” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழான தத்துவங்களின் ஏதேனும் பிரயோகம்பற்றி, எந்த நீதிப்பிரிவினுள் அத்தகைய நிலையம் அமையப் பெற்றுள்ளதோ அந்த நீதிப்பிரிவினுள் உள்ள நீதிவானுக்கு உடனடியாக அறிவிப்பது புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது அவரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் கடமையாதல் வேண்டும்.” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும்” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் வாசகம்

26 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“புனர்வாழ்வு உதவி பற்றிய விபரங்கள், புனர்வாழ்வுச் செயல்முறையின் பாகமாக ஆளொருவர் உட்பட்டிருந்த புனர்வாழ்வு தொடர்பான விபரங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் கருமத்தை உள்ளடக்குதல்” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

31 முதல் 33 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

34 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 18 முதல் 19 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஈ) பணியகத்தின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம்:

ஆயின், இச்சட்டத்தின் நியதிகளின்படி எந்தக் கருமத்துக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கு பேரவை தத்துவத்தைக் கொண்டிருத்தலாகாது. ”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ 35. (1) அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடு” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 3 முதல் 7 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) புனர்வாழ்வுக்கான நிலையங்களைப் பேணுதல்;

(ஆ) பணியகத்தினால் புனர்வாழ்வளிக்கப்படும் ஒவ்வொரு வகுதியினரான ஆட்கள் தொடர்பிலும் புனர்வாழ்வு, சிகிச்சை, பிற்கவனிப்பு மற்றும் ஆதாரச் சேவைகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்;

(இ) புனர்வாழ்வுக்கான நிலையமொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்களை விடுவித்தல் தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும்; அத்துடன்

(ஈ) புனர்வாழ்வுக்கான நிலையத்தில் ஒரு தரவுத்தளம், பதிவேடுகள் மற்றும் சம்பவ ஏடுகளைப் பேணுதல்:”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 12 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"சபையின் ஒருப்பாட்டைப் பெறுதல் வேண்டும்:

ஆயின் மேலும், அமைச்சர் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு முன்னர் இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் ஒருப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வசதியாகக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதிகள், அவை பாராளுமன்றத்தினல் அங்கீகரிக்கப்படுவதன்மேல் அல்லது பாராளுமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அடுத்துப் பின்னரான தேதியன்றுவலுவுக்கு வருதல் வேண்டும்." .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

36 ஆம் வாசகம் ஏற்றக்கொள்ளப்பட்டது.

37 ஆம் வாசகம்

32 ஆம் பக்கத்தில் 7 முதல் 17 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"புனர்வாழ்வு" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டிய புனர்வாழ்வு, சிகிச்சை, பிற்கவனிப்பு மற்றும் ஆதாரச் சேவைகளுக்கான நடவடிக்கைமுறைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் எனப் பொருள்படும். ".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னுரை

1 ஆம் பக்கத்தில் 1 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டும் உட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"முன்னுரை அவுடதங்களில் தங்கியுள்ள ஆட்களாக வந்துள்ள ஆட்களினதும் வேறு ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி அடையாளங் காணப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களினதும் புனர்வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையையும் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டும், இது பாரதூரமான சிக்கலொன்றாகவும் தேசிய பிரச்சினையொன்றாகவும் வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிப் பதவி (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏலவே உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும்:" .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“முன்னுரை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**8. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019 ):** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் 2021.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2018):** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2022.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019):** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2021.12.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஹோமியோபதி மருத்துவ மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2017):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டத்தின் 15, 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ் 2022.07.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோமியோபதி மருத்துவ மன்றத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2022.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2016):** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 23(1), (2) ஆம் பிரிவுகளின் கீழ் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020):** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பொது தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**18. அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019):** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரச மரக்கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**19. அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020):** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2022.09.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரச மரக்கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**20. இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2014):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23 (5) ஆம் பிரிவின் கீழ் 2017.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**21. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2016):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2020.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**22. தேசிய தாவரவியல் பூங்கா அறக்கட்டளை நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2017):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தாவரவியல் பூங்கா கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தாவரவியல் பூங்கா அறக்கட்டளை நிதியத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**23. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2017):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**24. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2019):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**25. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2019):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**26. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**27. இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2020):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**28. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2020):** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**29. மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2020):** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**30. ஒத்திவைப்பு :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் பி.ப. 5.08 மணிக்கு பிரதிச் சபாநாயகரால் 2023 சனவரி 19 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.